செப்டம்பர் 2026
மலர் 24, இதழ் 12

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்


**SATHTHIYA VAARTHAI - TAMIL**
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-


# மனப்பூர்வமாகக் கொடுப்போம்



# மனப்பூர்வமாகக் கொடுப்போம்

**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி. 9 : 7).**

**“கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்” (லூக். 6 : 38).**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் ஏதாவது ஒரு காரியத்தை விவரித்துக் கூற விரும்பினால் உவமையாகக் கூறிவிடுவார். ஏனென்றால் புரிந்து கொள்ள முடியாத மக்கள் கூட எளிதில் புரிந்து கொள்ள முடியும். மேலும் எந்த ஒரு காரியத்தையும் **கட்டாயப்படுத்தினது** கிடையாது. லூக். 21 : 1-4 மற்றும் மாற்கு 12 : 41-44 ஆகிய பகுதியிலே காணிக்கைப் பெட்டியிலே காசு போடுகிறபோது, ஜனங்களின் உள்ளத்தை இயேசு பார்த்துக் கொண்டிருந்தார். வசதிபடைத்த பணக்காரர்களோ தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப் போட்டனர். இறுதியாக ஒரு ஏழை விதவையும் வந்து காணிக்கைப் போட்டாள். ஆண்டவர் அந்த ஏழை விதவை போட்ட காணிக்கையைக் குறித்து என்ன கூறினார்? **....இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார் (மாற். 12 : 44).** ஆண்டவருக்கு கொடுக்கும் காணிக்கையைக் குறித்துக் கண்டிப்பாக இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று எந்த ஒரு சட்டத்தையும் ஆண்டவர் கூறவில்லை. அவரவர் குடும்பத்தின் நிதி நிலைமையை இருதயத்தில் நினைவு கூர்ந்து தன் மனதில் நியமித்தபடி கொடுத்தால் போதும். அந்த ஏழை விதவை உற்சாகமாய், மனப்பூர்வமாய் தனக்கென்று எதையும் எடுத்து மறைத்து வைக்காமல் காணிக்கைப் போட்டாள்.

**<u>காயீன் ஆபேல் காணிக்கை :</u>**

காயீன், தன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான் – Unselected.

ஆபேல், தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான் – Selected.

இருவர் கொண்டு வந்த காணிக்கையையும் தேவன் பார்க்கிறார். எந்த உள்ளத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பார்க்கிறார். காயீன் தோட்டவேலை செய்தபடியால் காய்கனிகளைக் கொண்டு வந்தான். ஆபேலோ ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பர் தொழிலைக் கொண்டிருந்தபடியால், கர்த்தருக்கு ஏறெடுக்கும் காணிக்கையாக ஆடுகள் மற்றும் ஆட்டுக்குட்டிகளை தேர்வு செய்து (Selected) சிலவற்றைக் கொண்டு வந்தான். அதிக சந்தோஷத்தோடு, மனப்பூர்வமாய்க் கொண்டு வந்தான். கர்த்தர் ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டார். காயீனுடைய காணிக்கை, தேவனால் அங்கீகரிக்கப்படவில்லை.

**<u>காணியாட்சியை விற்றவர்கள் நிலை :</u>**

அப்போஸ்தலருடைய நடபடிகள் 5-ஆம் அதிகாரத்தில் அனனியா, சப்பீராள் என்ற கணவன், மனைவி காணிக்கையை எப்படி கொண்டு வந்தார்கள்? ஒரு பங்கை வீட்டிலே வைத்துவிட்டு, ஒரு பங்கை மட்டும் காணிக்கையாகக் கொண்டு வந்து வைத்தார்கள். இவர்கள் இரண்டு பேரும் செய்த முதல் தவறு ஏமாற்றியது. இரண்டாவதாக செய்த தவறு என்னவென்றால் பேதுரு கேட்டபோது, இரண்டு பேரும் பொய் கூறினர். இதிலே ஒவ்வொருவரும் இவ்வளவு கொண்டு வர வேண்டுமென்று யாரையும் பேதுரு கட்டாயப்படுத்தவில்லை. மனப்பூர்வமாய் சபையார் அனைவரும் கொண்டு வந்தனர். ஆனால், அனனியாவும் சப்பீராளும் மனதில் வஞ்சகத்தை வைத்துக் கொண்டு, கொடுக்க வேண்டுமே என்ற கட்டாயத்தின் நிமித்தமாக காணிக்கைக் கொண்டு வந்தனர். கர்த்தர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருக்குக் கொடுக்கும் காணிக்கை மனப்பூர்வமாய் இருக்க வேண்டும்.

என்னவிதமான கடன் உதவியோ, காணிக்கையோ, தானியத்தை அளந்து போடுவதோ, ஆபத்து மற்றும் கஷ்ட நேரத்தில் உதவிக்கரம் நீட்டுவோமாக. உற்சாகமாய் உதவுவோம்; மனப்பூர்வமாய்க் கொடுப்போம்.

1. சகோதரனுக்குத் தேவையானதைக் கொடுப்போம்.

2. தேவனுடைய வீட்டிற்குத் தேவையானதைக் கொடுப்போம்.

3. தாழ்மையோடு கொடுப்போம்.

4. அன்பென்னும் கடனை அள்ளிக் கொடுப்போம்.

**<u>1. சகோதரனுக்குத் தேவையானதைக் கொடுப்போம்</u>**

**... உன் சகோதரரில் எளியவனான ஒருவன் இருந்தால்...... அவனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறந்து, அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கடன்கொடுப்பாயாக. (உபா.15 : 7,8).**

கர்த்தருக்குக் கொடுப்பது **ஒரு பெரும் வாய்ப்பு.** அதை நாம் மறந்துவிடக் கூடாது. நமக்கு கிடைத்த ஒரு **மாபெரும் பாக்கியமாகக்** கருத வேண்டும்.

கர்த்தர் நம்மைப் படைக்கும் போது, சிலரை எளியவனாகவும், சிலரை பணக்காரனாகவும் படைத்திருக்கிறார். லூக். 16 : 19-31-இல் இதற்கு தெளிவாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. பணக்காரனும், தரித்திரனும் ஒன்றாய் சேர்ந்து வாழ முடியாது. ஆனால் தரித்திரனான அவனும் ஒரு சகோதரன், ஒரு மனிதன் என்று பணக்காரன் நினைக்க வேண்டும். அதுவும், அந்த ஏழையானவன் பணக்காரனுடைய வாசலருகே அமர்ந்திருந்தான்.

**... நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; ஆதி 4 : 7.** இந்த வார்த்தைகளைத் தேவன் காயீனிடம் சொன்னார். **நமக்கும் சேர்த்து** தான் தேவன் கூறினார். **ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் (நீதி 19 : 17).** ஆகவே, கஷ்டப்படுகிறவர்கள் யாராக இருந்தாலும் வசதியுள்ளவர்களாக நாம் இருப்போமானால் கைமாறு கருதாமல் கொடுக்க வேண்டும் (லூக். 6 : 35). வசதி இல்லாதவனுக்கு ஒரு உதவி செய்தால் அவன் அந்த உதவிக்கு ஈடாக ஏதாவது தனக்குச் செய்வான் என்று **எதிர்பார்த்து செய்யக்கூடாது.**

லூக். 15 : 11-32 வசனங்களிலே பார்த்தோமானால், ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். இளையவன் தன் தகப்பனிடம் ஆஸ்தியில் தன் பங்கைப் பிரித்து வாங்கிக் கொண்டு தன் நண்பர்களோடு தூரதேசத்திற்குப் போய் விட்டான். பணமெல்லாம் செலவழிந்து போனபோது நண்பர்களும், தன்னை விட்டுச் சென்றதை உணர்ந்து வேதனைப் படுகிறான். தன் தகப்பன் வீட்டின் வசதிகளை நினைத்துப் பார்க்கிறான். மனமாற்றம் அடைந்தவனாக தன் தகப்பன் வீட்டை நோக்கி வருகிறான். தகப்பன் சந்தோஷப்பட்டு இளையவனுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்தார். மூத்தவன் இந்தக் காரியத்தை விரும்பாமல் கோபித்துக் கொள்கிறான். இளையவனின் தேவை நல்ல ஆகாரம் மட்டுமே. இளையவன் மீது எத்தனையோ தவறுகள் இருந்தாலும் மனமாற்றம் பெற்று வந்தவன். அதுமட்டுமல்ல, தவறு செய்து மனமாற்றம் பெற்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது ஆண்டவரது கட்டளை மற்றும் விருப்பம். சகோதரனுக்குத் தேவை ஏற்படும்போது உதவுவதே உடன் பிறந்தவர்களின் கடமை மற்றும் பொறுப்பு.

இஸ்ரவேல் தேசத்தை 40 வருடங்களாக மக்களை நியாயம் விசாரித்த தாவீதின் மகனான சாலொமோன் தான் எழுதிய நீதிமொழிகள் 17 : 17-இல் சகோதரனைப் பற்றி எழுதியிருக்கிறார்.

**இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்** என்ற வசனம் நமக்கு என்ன சொல்லுகிறதென்றால் நல்லவசதி இருக்கும் போது நம்மையொத்த சகோதரன் / சகோதரிக்கு உதவ வேண்டும். இடுக்கண் என்று ஞானி குறிப்பிட்டுச் சொல்வது எந்த சூழ்நிலையிலும், எந்த இக்கட்டு நேரத்திலும் மனப்பூர்வமாய் உதவ வேண்டும். அதைவிட்டு சகோதர, சகோதரிக்கு விரோதமாக

நாம் பட்டயம் எடுக்கக் கூடவே கூடாது. கேள்விப்பட்ட மாத்திரத்தில் லோத்து, மனைவி, பிள்ளைகள் மற்றும் பொருட்கள் எல்லாவற்றையும் எதிராளியிடமிருந்து மீட்டு வந்த முதல் முற்பிதாவான ஆபிரகாமை நினைத்து நாம் வாழ வேண்டும்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தின் இரண்டாவது ராஜா. சவுலுக்கு அடுத்தபடியாக அரியணையில் அமர்ந்தவர். அரியணைக்கு வந்தவுடன் தேசத்தில் எத்தனையோ பிரச்சனைகளை சந்தித்தவர். அதே சமயம் தன்னை மட்டுமே வேட்டையாடின சவுல் ராஜா செய்த காரியத்தை மனதில் வைக்காமல் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்த சவுலின் மகனான யோனத்தானை நினைத்துப் பார்க்கிறார். அவர் அரசாட்சிக்கு வந்தவுடன் அவன் தன்னுடைய பிரதானிகளைப் பார்த்துக் கேட்ட **முதல் கேள்வி.**

"யோனத்தான், நிமித்தம் என்னால் தயவுபெறத் தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவன் உண்டா?" என்று தாவீது கேட்டான். சவுலினால் எத்தனையோ முறை அவனுடைய ஈட்டிக்குத் தப்பித்து, கர்த்தரின் கிருபையால் வாழ்ந்த மனிதர் தாவீது. ஆனால், சவுல் செய்த ஒன்றையும் மனதில் வைக்காமல் சவுலின் பேரனான (யோனத்தான் மகன்) மேவிபோசேத்துக்கு (இரண்டு கால்களும் முடமான குமாரன்) ஒரு சிறப்பிடம் கொடுத்து, எந்த ஒரு வேலையும் செய்ய முடியாத மேவிபோசேத்தை, தனக்கு சமமாக வைத்து போஷித்த மகா பெரிய ராஜா. சவுலின் நிலங்களையெல்லாம் திரும்பக் கொடுத்த உத்தம மனிதன். இத்தகைய நற்பண்புகளைத் தான் கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். கடனுக்குக் கடன், வட்டிக்கு வட்டி, தீமைக்குத் தீமை, பழிக்குப் பழி என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, ஒருவரை ஒருவர் தாங்கி, கடினமான சூழ்நிலையில் நம் கையைத் தாராளமாய்த் திறந்து அவனுடைய தேவையைப் பூர்த்தி செய்து தருவோமானால், கர்த்தரும் நமக்கு அவ்வாறே செய்வார்.

வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் நம் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப் பண்ணுவார் (மல். 3 : 10).

## 2. மனப்பூர்வமாய்க் கொடுங்கள்

**இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது. உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம் (I நாளா. 29 : 14) தாவீதின் தாழ்மையான வார்த்தைகள்.** உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு நாங்கள் சவதரித்திருக்கிற இந்தப் பொருட்கள் எல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது. **எல்லாம் உம்முடையது.**

ஈசாயின் கடைசி மகனான தாவீது, இஸ்ரவேல் அனைத்துக்கும் ராஜாவாக எப்ரோனில் ஏழு வருஷமும், எருசலேமிலே முப்பத்தி மூன்று வருஷமும் ராஜாவாயிருந்தார். தன்னுடைய அத்தனை போர் வெற்றிக்கும், குடும்ப நலன், குழந்தை பாக்கியம் எல்லாவற்றிக்கும் தனக்கு உறுதுணையாய் நின்ற தேவனுக்கு ஒரு ஆலயம் கட்ட விரும்பினார். ஆனால் கர்த்தர் – தாவீதிடம் என்ன கூறினார்?

**...நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து ரத்தத்தைச் சிந்தினாய் என்றார் (I நாளா 28 : 3).**

ஒரு ஆலயம் கட்டுவதற்குத் தேவையான அனைத்துப் பொருட்களாகிய இரும்பு, வெள்ளி, தங்கம், ரத்தினங்கள், கற்கள், கோமேதகம், வெண்கலம் மற்றும் இன்னும் என்னென்ன தேவையோ எல்லாவற்றையும் கொடுத்தார். ஆலயம் கட்டுவதற்குத் தேவையான எல்லா ஆயத்தமும் பண்ணினார்.

ஆலயத்தைக் கட்ட மனப்பூர்வமாய் கொடுத்த அனைத்துப் பொருட்களையும் உத்தம இருதயத்தோடு கொடுத்தேன். தம்முடைய ஜனமும் மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு தாவீது சந்தோஷப்பட்டார். இவ்வளவு பொருட்களையும் கண்டு ஆனந்தத்தின் எல்லைக்கே சென்று கொடுத்தார். ஆனால் ஆலயத்தைக் கட்ட வேண்டாம் என்று தேவன் கூறியபோது, தாவீதின் மனநிலை எத்தனை கஷ்டப்பட்டிருக்கும்!! இருந்தாலும் தன்னுடைய குமாரனான சாலொமோன் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவான் என்று கூறியபோது அதிக மகிழ்ச்சி அடைந்தார்.

ஆலயம் கட்டும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பது கிடையாது. இந்த உலகத்தில் பிறந்த அனைவருமே சொந்தமாக வீடு கட்டி குடியிருக்கவில்லை. எல்லோருக்கும் அந்த கொடுப்பினை அமையாது.

“கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுபவன் உழைப்பு வீணென்று அறி”, என்ற பாடலைப் பாடினால் வீடானது கர்த்தருடைய கிருபை இல்லாமல் யாரும் வீடு கட்ட முடியாது என்பது நன்கு விளங்கும்.

வீட்டைக் கட்டிப்பார். திருமணத்தைச் செய்து பார் என்று முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள். இரண்டு காரியமுமே கடினமான காரியம். இரண்டிற்கும் பணச் செலவு அதிகமாகும். வீட்டைக் கட்டி முடிக்கும் வரை பொருட்கள் வாங்க வேண்டுமானால் கடன் வாங்க வேண்டும். ஆனால், எருசலேம் தேவாலயத்தைக் கட்ட தாவீது ராஜாவும், தேவனுடைய ஜனங்களும் எந்த ஒரு கடனும் வாங்கவில்லை. தேவன், தமக்கு கட்டும் ஆலயத்திற்குத் தேவையானதை தாமே தெரிந்து, அறிந்து இஸ்ரவேல் ராஜா மற்றும் தம்முடைய ஜனங்கள் மூலமாக சேர்த்துக் கொண்டார்.

ஒரு வீட்டின் தாயாருக்குப் பிறந்த தினம் வந்தது. அந்த தாயின் பெரிய பிள்ளைகள் எல்லாம் ஆளுக்கொரு பரிசை வாங்கி இனிய பிறந்த நாள் வாழ்த்து என்று கூறி வாழ்த்தினார்கள். மூன்று வயதான கடைசி மகள் வேக, வேகமாக ஓடி ஒரு தாம்பூலத்தை எடுத்து வந்து அதின் மேல் நின்று தனது தாயினிடம் இவ்விதமாகக் கூறினாள். “அம்மா உங்கள் பிறந்த நாளன்று உங்களுக்குப் பரிசு தர என்னிடத்தில் ஒன்றுமில்லை. ஆகவே என்னையே பரிசாக எடுத்துக் கொள்ளுங்கள்” என்று கூறினாள். தன்னையே முழுமையாக மனப்பூர்வமாய் எடுத்துக் கொள்ளுமாறு சொன்ன மகளை தாய் அதிகமாக சந்தோஷப்பட்டு தூக்கி அணைத்துக் கொண்டாள். சாலொமோன் ஆண்டவருடைய ஆலயத்தைக் கட்டி முடிக்க ஏழு வருடங்கள் சென்றன (1 இராஜா 6 : 38). மனப்பூர்வமாய் கொடுப்போம்; மன மகிழ்ச்சியாயிருப்போம்.

## 3. தாழ்மையோடு கொடுப்போம்

தம்முடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதனிடம் தேவன் விரும்புவது தாழ்மை. மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்தே அறிகிறார். கர்த்தருக்கு ஏறெடுக்கும் எந்த காணிக்கையாக இருந்தாலும் தாழ்மையோடு கொடுக்க வேண்டும்.

ஞானி தன்னுடைய நீதிமொழிகள் புத்தகத்தில் 15 : 33 மற்றும் 18 : 12-இல் மேன்மைக்கு முன்னானது தாழ்மை என்று எழுதுகிறார். தாழ்மையுள்ளவன் மேன்மையடைவான். நமது உயிர், உடல், அறிவு, குடும்பம், செல்வம், செல்வாக்கு போன்ற எல்லாமே கர்த்தரால் கிடைத்தன என்று எண்ணினால்/நினைத்தால் நாம் தாழ்மையோடு இருப்பது எளிது. உள்ளத்தில் தாழ்மையாயிருப்பது கர்த்தரால் மேன்மையைக் கொண்டு வரும். அகந்தையும், மனமேட்டிமையும் நமக்கு ஆகாது. எல்லாச் சூழ்நிலைகளிலும் தாழ்மையோடு இருப்பதற்கு கவனமாயிருக்க வேண்டும்.

ஆதி. 16-ஆம் அதிகாரத்தில் வரும் எகிப்தியப் பெண்ணான ஆகார் (சாராளின் அடிமை) தான் கர்ப்பவதியானதைக் கண்ட போது, தன் எஜமானியான சாராளை அற்பமாக எண்ணினாள். அதன் விளைவு, ஆபிரகாமின் வீட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது.

லூக். 10-ஆம் அதிகாரத்தில் 30-37 வசனங்களிலே சமாரியன் ஒருவனைப் பற்றி ஆண்டவர் நியாய சாஸ்திரியிடம் பேசுகிறார். அடிபட்டுக் கிடந்தவன் யூதனாக இருந்தாலும் கஷ்டத்தில் இருக்கும் அவனுக்காகத் தன்னைத் தாழ்த்தினான். தன்னுடைய வழிப் பிரயாணத்திற்கு வைத்திருந்த திராட்சரசம், எண்ணெய் இரண்டையும் அடிபட்டவன் காயங்களிலே வார்த்து, சாப்பாடு, தண்ணீர் கொடுத்து, அவன் நிதானித்த பிறகு, தன்னுடைய சொந்த வாகனத்திலே ஏற்றி, சத்திரத்தின் உரிமையாளனிடம் பார்த்துக் கொள்ளுமாறு வேண்டினான். இது ஒரு உண்மைச் சம்பவம். சமாரியன் எப்படி உதவி செய்தான்? தன்னைத் தாழ்த்திக் கொடுத்தான்.

கிறிஸ்துவானவர் சமாரியனை மேன்மைப்படுத்தி வேதாகமத்தில் சமாரியர்களைக் கனப்படுத்தினார்.

லூக்கா 17 : 11-19 வசனங்களிலே பத்து குஷ்டரோகிகள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சந்திக்கிறார்கள். குஷ்டரோகம் நீங்குமாறு இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள். ஆசாரியர்களிடம் போய் காண்பியுங்கள் என்று இயேசு கூறினார். ஆசாரியர்களைப் போய் பார்ப்பதற்கு செல்லும் வழியில், தாங்கள் பூரண சுகம் அடைந்ததைக் கண்டு ஒருவன் மாத்திரம் திரும்பி வந்து, ஆண்டவருக்குத் தாழ்மையாக தன்னுடைய நன்றியைத் தெரிவித்தான்.

**திரும்பி வந்தவன் சமாரியன்**

தாழ்மையாகச் செய்யும் எந்தக் காரியமாக இருந்தாலும் அதை கர்த்தர் பார்க்கிறார், கவனிக்கிறார் என்ற பய உணர்வு இருக்க வேண்டும். தாழ்மையோடு நாம் கொடுப்போமானால், அந்தக் காரியத்துக்கு ஒரு அங்கீகாரத்தை கர்த்தர் தருவார். சாறிபாத் விதவை - எலியா தீர்க்கன் சொல்லுக்கு கட்டுப்பட்டு, தாழ்மையோடு ஒரு அடையைச் செய்து கொடுத்தாள். அதைப் பார்த்த எலியா தீர்க்கன் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்து, அந்த விதவையின் வீட்டு மாவு பாத்திரத்தையும், எண்ணெய் கலசத்தையும், ஆசீர்வதித்து, வாழ்நாள் முழுவதும் விதவையும் அவள் மகனும் ஆகாரக் குறைபாடில்லாமல் வாழ வழிசெய்தார்.

**கொடுங்கள், அப்போது உங்களுக்கும் கொடுக்கப்படும்... (லூக். 6 : 38).**

**4. அன்பென்னும் கடனை அள்ளிக் கொடுங்கள்**

**கடன் என்றால் என்ன?**

ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் (ரோமர் 13 : 8). அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ரூத் புத்தகத்திலே நாம் பார்ப்பது என்னவென்றால் குடும்பத்திலோ பணித்தளத்திலோ ஏதாவது ஒரு பிரச்சனை-யோடிருந்தால் நம் குழந்தைகளைப் பார்த்தால் எல்லாக் கவலையும் உடனே பறந்து போய்விடும். ஆனால் ரூத், நகோமி குடும்பத்திலே எந்த ஒரு குழந்தைச் செல்வமும் இல்லாதிருந்தும் மாமியார் நகோமியும், மருமகள் ரூத்தும் ஒருவரையொருவர் மிகுந்த பாசத்துடன் நேசித்த உன்னத உறவு. நம் குடும்பத்தில் எப்படி இருக்கிறார்கள் என்று சிந்திப்போம். அன்பு என்ற கடன் ஒன்றைத்தவிர வேறொன்றிலும் கடன்படக் கூடாது. நகோமியும் ரூத்தும் அன்பைக் காட்டுவதில் முந்திக்கொண்ட மக்கள். நட்புக்கு இலக்கணம் வகுத்தவர்கள். அன்பு என்னும் கடனை பகிர்ந்தளித்தவர்கள். மருமகளாகிய ரூத் தன் மாமியார் மீது தன்னலமற்ற அன்பைக் காட்டுவதை ஒரு கடனாக நினைத்தாள். நகோமி அந்தக் கடனை அடைப்பதற்கு போவாஸை ரூத்துக்கு திருமணம் செய்து கொடுத்தாள்.

ஆனால், அன்பென்னும் கடனைக் குறித்து சிறிதும் அறியாதவனாயிருந்த ஒரு பணக்காரனின் நிலைமை என்னவானது என்று பார்ப்போம். லூக். 16 : 19-31 வசனங்களிலே ஒரு பணக்காரன் மற்றும் ஏழை லாசருவையும் நாம் காணலாம். மிகவும் வசதிபடைத்தவர்கள் / பணக்காரன் / ஐஸ்வரியவான் இவர்கள் ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்வதில் எந்த தவறும் கிடையாது. ஆனால், அவன் வாசலில் சுகவீனத்தோடு அமர்ந்திருந்த அந்த ஏழை லாசருவை அவன் கண்டு கொள்ளாமல், அவன் ஏதாவது சாப்பிட்டானா, இல்லையா என்ற எண்ணம் அந்த பணக்காரன் உள்ளத்தில் தோன்றவில்லை. காலம் கடந்தது. இருவரும் மரித்தனர். பாதாளத்தில் பணக்காரன் வேதனைப்படுகிறான். பரலோகத்தில் லாசரு தேற்றப்படுகிறான். பணக்காரனிடமிருந்த சுயநலத்தைப் பாருங்கள். தன் கண் முன்னிருந்த நோயுற்ற ஏழை லாசருவின் மீது அன்பு கொடுக்க முடியவில்லை. ஆனால், பூலோகத்திலுள்ள தன்னுடைய ஐந்து சகோதரர்களும் தன்னைப் போல் இந்த பாதாள வேதனையை அடைய வேண்டாமென்று லாசருவை அனுப்புமாறு கேட்கிறான்.

**சுயநலத்தின் தீய குணாதிசயங்கள்**

1. தன்னை மட்டுமே சிந்தித்தல்

2. எந்த வசதியும் இல்லாதவர்களை நினைக்காத தன்மை.

3. பெருமை மற்றும் மேட்டிமை உயர்ந்து காணப்படுதல்.

4. தன்னுடைய சொல்லுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

5. ஆணவம் மற்றும் செருக்கு கண்ணை மறைத்தல்.

இப்பேர்ப்பட்ட தீய குணங்கள் நம்மில் உருவாகுவதற்கு காரணம் அன்பில்லாத உள்ளத்தை உடையவர்களாக இருப்பதே. அப்போஸ்தலனாகிய பவுல், 1 கொரி 13 : 4-7 வசனங்களிலே பவுல் அன்பைக் குறித்து பதினான்கு (14) காரியங்களைக் குறித்து எழுதி இருக்கிறார். அப்.யோவான் எழுதின 1 யோ. 4 : 20-இல் அன்பைக் குறித்து யாரை ஒப்புமைப்படுத்தி பேசுகிறார்?

**...தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?** இந்தக் கேள்வி நம் உள்ளத்தில் எப்போதும் இருப்பதாக.

*என் தேவன் அன்புள்ளவர்,*
*என் தேவன் பரிசுத்தர்,*
*என் தேவன் நீதிபரர்.*

எனக்காக ஜீவன் தந்த இயேசு அவரே! ஆண்டவர் மட்டும் எப்போதும் நம்மீது அன்புள்ளவராகவே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அதேசமயம் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்ட நாம் மட்டும் அன்பில்லாதவர்களாக இருப்பதைக் கர்த்தர் பார்க்கும் போது எத்தனை வேதனைப்படுவார், யோசியுங்கள்.

எந்த ஒரு காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், கர்த்தர் பார்க்கிறார் என்று பயந்து செய்வோம். அன்பாக, மனப்பூர்வமாய்ச் செய்வோம். பாதியை மறைத்து வைத்து மீதியை கர்த்தருக்குக் கொடுப்போம் என்று எண்ண வேண்டாம்.

தேவனுடைய வீட்டிற்குத் தேவையானது காணிக்கை மட்டும்தான் என்று நினைக்க வேண்டாம். புதிதாக ஒரு ஆலயம் கட்டப்படுகிறதென்றால் அந்த ஆலயம் கட்டுவதற்கு தேவையான பொருட்கள் எவ்வளவோ உள்ளன. அதில் ஒரு பங்கை நமது பங்காக மனப்பூர்வமாய்க் கொடுப்போம்.

எந்த ஒரு செயலையோ / உதவியையோ நாம் தாழ்மையோடு செய்ய வேண்டும். எந்த ஒரு பிரச்சனை வந்தாலும், தாழ்ந்து போவோமேயானால் பிரச்சனை அதி சீக்கிரத்தில் முற்றுப்பெற்று விடும். மேட்டிமைக்கோ, பெருமைக்கோ இடம் கொடுக்காமல் இருந்தாலே போதும். கோலியாத்துக்கு (பெலிஸ்தியன்) ஒரு முடிவு கொடுக்கும் வாலிபனான தாவீது யாரை முன் வைத்தான்? இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று சவால் விட்டான். தன்னைத் தாழ்த்தி, கர்த்தரை முன் வைத்தான். தாவீது மட்டுமல்ல, ஆபிரகாம், யாக்கோபு, தானியேல், மோசே, யோசுவா, எலியா, யோசேப்பு எல்லோருடைய பாதையும், வாழ்க்கையும் நல்லதாக அமைந்ததற்குக் காரணம், எல்லாக் காரியத்திலும் தங்களைத் தாழ்த்தி, மற்றவர்களுக்கு கொடுத்து உதவியதே.

இறுதியாக, அன்பு என்னும் கடனிலே நாம் காண வேண்டிய முதலாவது காரியம் - யாரிடமாவது நாம் கடன் வாங்கினால் அதற்கு வட்டி போட்டு தான் கடன் தருவார்கள். கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது எல்லோரிடம் காட்ட வேண்டிய அன்பு மட்டுமே. ஆனால், நம் ஆண்டவர் மட்டுமே அந்த அன்பு கடனுக்கு வட்டியோடு சேர்த்து நமக்கு நிறைய ஆசீர்வாதங்களைத் தருவார். அன்பு என்னும் மூன்று எழுத்தை எப்படியெல்லாம் வேதாகமத்தில் தீர்க்கன்கள் மற்றும் ராஜாக்கள் உபயோகப்-படுத்தியிருக்கிறார்கள் என்று அறிந்து, நம்மை நாமே ஆராய்ந்து மற்றவர்களிடம் அன்பை ஒரு கடனாகச் செலுத்தி மன சமாதானத்தோடு வாழ்வோமாக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

**– திருமதி. பேர்ல் குயில்ராஜா**

# IBT-இன் நிகழ்வுகள்



08-05-2026 IBT ஊழிய வருடாந்தர உபவாச ஜெபக்கூடுகையில் தேவ செய்தியளிக்கும் திரு. S. தீமோத்தி அவர்கள்.



20.04.2026 முதல் 25.04.2026 வரை ஒடிசா பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற புதிய ஏற்பாடு சரிபார்ப்புப் பணியில் மொழி பெயர்ப்பாளர்கள்.




14.6.2026 அன்று கோவை, திருச்சி ரோடு, சி.எஸ்.ஐ. சபை வளாகத்தில் நடைபெற்ற மிஷனெரி ஞாயிறு விற்பனை விழாவில் IBT புத்தக Stall-இல் பிரதிநிதிகள் மற்றும் IBT ஊழியர்கள்.



31.5.2026 அன்று கோவை, திருச்சி ரோடு, சி.எஸ்.ஐ கிறிஸ்து நாதர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட 40 மிஷனெரிகளில் இரண்டு IBT-யின் மொழிபெயர்ப்பாளர்கள் சகோ. சாமுவேல் மற்றும் சகோ. ராஜா ஆகியோர் கோவை பிஷப் மற்றும் ஆயர்களுடன்.




05.07.2026 அன்று மேட்டூர் கொளத்தூரிலுள்ள பெந்தேகொஸ்தே சபையில் தேவ செய்தியளிக்கும் சகோ. சைமன் அவர்கள்.




21.06.2026 அன்று மேட்டூர் ஞானகன்மலை சபையில் IBT ஊழிய விளக்கமளிக்கும் திருமதி. நவமணி சேகர் அவர்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்



05.07.2026 ஒடிஷா, மல்கன்கிரி IMS ஆலயத்தில் தேவ செய்தியளிக்கும் பணித்தள இயக்குனர் திரு. சாமுவேல் ஞானதாஸ் உடன் மொழிபெயர்ப்பு செய்யும் IMS மிஷனெரி திருமதி. கிரிஜா ஐசக் அவர்கள்.




18.07.2026-இல் ஊரப்பாக்கம் ஜுபிலி மெமோரியல் வேதாகம கல்லூரி வளாகத்தில் நடந்த திட்டக்கூடுகையில் பாடல் பாடும் பிரதிநிதிகள்.



18.07.2026 அன்று திட்டக்கூடுகை நடைபெற்ற கல்லூரியின் முதல்வர் Rev. Dr. பிரகாஷ் ஆபிரகாம் மேத்யூ அவர்கள் IBT ஊழியத்திற்காக ஜெபிக்கிறார்.



ஒடிஷா பாப்பன்பள்ளி சிறுவர்கள், உணவு வேளையின் போது.



திட்டக்கூடுகையில் பங்கேற்ற IBT-இன் பிரதிநிதிகள்.



19.07.2026 அன்று திட்டக்கூடுகையின் 2-ஆம் நாள் அன்று பங்கு பெற்ற IBT-இன் தலைவர் P. ஜெபஸ் செல்வின் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்கும் Rev. ராஜு அவர்கள்.

# ஆசிரியர் மடல்

நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுடைய தேவாதி தேவனுடைய மகத்துவமுள்ள நாமத்தினாலே, சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**"நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள், உத்தமனுக்குக் கர்த்தர் துணை என்றான்" (2 நாளா.19:11).**

யூதா தேசத்து ராஜாவாகிய யோசபாத், தான் அரசாண்ட நாட்களில் ஒவ்வொரு பட்டணத்திலும் நியாயாதிபதிகளை வைத்து, அவர்களிடம் "நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, உத்தம இருதயத்தோடு ஜனங்களை நியாயம் விசாரியுங்கள். தேவனிடத்தில் அநியாயமும், முகதாட்சணியமும் இல்லை. அதேபோல நீங்களும் அப்படி செய்யும்பொழுது, உங்களுடைய உத்தம செய்கைகளைக் கண்டு, கர்த்தர் உங்களுக்கு துணை நிற்பார்" என்றான். கர்த்தர் யோசபாத்தின் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்தினார். ஏனெனில் அவன் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாய் நடந்தான். எப்படியெனில் யோசபாத் முந்தைய ராஜாக்களைப் போல பாகால்களைத் தேடாமல், தாவீது கர்த்தருக்கு முன்பாய் உத்தமமாய் நடந்தது போல, தானும் நடந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டான். அதினிமித்தம் கர்த்தர் அவனுக்கு ஐசுவரியத்தையும், கனத்தையும் கொடுத்தார். புதிய ஏற்பாடு காலத்திலே பொருளாசை என்பது விக்கிரக ஆராதனைக்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறது. இந்த நாட்களிலும் நாம் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை பிரதானமாகத் தேடாமல், கர்த்தரையே பிரதானமாக தேடும்பொழுது, யோசபாத்திற்கு எப்படி கர்த்தர் ஐசுவரியத்தையும், கனத்தையும் கொடுத்தாரோ அப்படியே தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறவர்களுக்கு கர்த்தர் இதைக் கொடுப்பார்.

இரண்டாவதாக, யோசபாத் கர்த்தருடைய வேதத்தை உபதேசம் செய்யும்படிக்கு லேவியரையும், ஆசாரியரையும் ஏற்படுத்தி, அவர்களை யூதா தேசத்து பட்டணங்கள்தோறும் அனுப்பி, ஜனங்களுக்கு போதித்து வந்தான். இதினிமித்தம் யூதாவைச் சுற்றியிருக்கிற தேசங்களுடைய ராஜ்யங்களின் மேலெல்லாம் கர்த்தரால் உண்டான பயங்கரம் வந்ததினால், யோசபாத்தோடு யுத்தம் பண்ணாதிருந்தார்கள். கர்த்தருடைய வேதத்தின் மகத்துவத்தின் நிமித்தம் எப்படி பயங்கரமுண்டாயிற்றோ, அப்படியே நாமும் கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய இருதயத்திலே வைத்து, அதின்படி நடக்கும்பொழுது, தேவ வார்த்தை ஆவிக்குரிய பட்டயமாயிருந்து, நம்முடைய எதிரியான சாத்தானின் தந்திரங்களையும், கிரியைகளையும் அழித்துப் போடும். உபாகமம் 6 : 6-9-இல் இருக்கிற வசனங்கள் கூறுவது என்னவென்றால், கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய பிள்ளைகளிடத்தில் போதித்து, நாம் வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறபோதும், வெளியில் பிரயாணமாய் செல்லும் போதும், தூங்குவதற்கு முன்பும், காலையில் எழுந்தவுடனும் அவைகளைக் குறித்துப் பேச வேண்டும் என்று கர்த்தர் சொல்கிறார். நம்முடைய பிள்ளைகளுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு வசனத்தையாவது மனப்பாடமாக கற்றுக் கொள்ள நாம் பிரயாசப்படுவோமாக. அந்த வார்த்தை ஏற்ற வேளையில் அவர்களுடைய இருதயங்களில் கிரியை செய்யும். இயேசு கிறிஸ்து எப்படி வனாந்திரத்திலே வேத வசனத்தைக் கொண்டு சாத்தானை மேற்கொண்டாரோ அப்படியே நாமும் மேற்கொள்வோமாக.

**"பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" (நீதி.16:32).**

கடந்த ஜுலை மாதம் 5-ஆம் தேதியன்று மேட்டூரிலுள்ள "அக்னி ஜெப வீடு" சபை காலை ஆராதனையில் திரு. S. ராஜசேகரன் அவர்கள் தேவ செய்தியும், திரு. M. ஜான் வில்லியம் அவர்கள்

IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள். இதே நாளில் மேட்டூர் கொளத்தூரிலுள்ள பெந்தேகொஸ்தே சபை, காலை ஆராதனையில் சகோ. சைமன் அவர்கள் தேவ செய்தியும், சகோ. கிதியோன் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள். இதே மாதம் 26-ஆம் தேதியன்று திருப்பூரிலுள்ள CSI St. Paul's Church-இல் இறைசெய்திக்கு முன் திரு. ராஜகுமார் அவர்கள் IBT ஊழிய விளக்கம் கொடுத்தார்.

சந்தர்ப்பம் அளித்து, நல்ல வரவேற்பையும் கொடுத்து, காணிக்கையும் கொடுத்த மூன்று சபை போதகர்கள், சபை மூப்பர்கள், செயலர், பொருளர் மற்றும் பங்குபெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

IBT-இன் திட்டக்கூடுகை கடந்த ஜுலை மாதம் 18, 19 தேதிகளில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள "Jubilee Memorial Bible College Campus"-இல் நடந்தது. பிரதிநிதிகள் தங்குவதற்கான அறைகள் கொடுக்கப்பட்டு, கூடுகை நடத்துவதற்கான நல்ல ஹால் கொடுத்து, இரண்டு நாட்களிலும் சுவையான உணவு ஏற்பாடு செய்து, ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த சிறுவர் உதவியோடு போதகர் ராஜ் அவர்கள் உணவு பரிமாறும் பணி முதல் அனைத்தையும் உற்சாகத்தோடு, வாஞ்சையோடு செய்தது, மிகுந்த வியப்பைக் கொடுத்தது. மேலும் இக்கல்லூரியின் Principal Rev. Dr. Prakash Abraham Matthew அவர்களும், கூடுகை ஆரம்பத்தில் வந்திருந்து, IBT ஊழியத்தின் மேன்மையைக் குறித்தும் இதன் பொறுப்பாளர்களையும், பாராட்டிப் பேசியதோடு, இக்கூடுகைக்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபித்தார். அவருக்கு IBT சார்பாக நிறுவனத் தலைவர் எழுதி மொழியாக்கம் செய்யப்பட்ட Word of Life (Malayalam), Defeat the Despair மற்றும் Seeds for the Good Soil புத்தகங்களை IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள் பரிசாகக் கொடுத்தார்.

19.7.2026 ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனை நடத்தப்பட்டு, திரு. ராஜகுமார் அவர்கள் தேவ செய்தியளிக்க, திரு. கிறிஸ்டோபர் அவர்கள் IBT ஊழிய விளக்கமளித்தார். இக்கூடுகை நடத்த அனுமதி கொடுத்த கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், அனைத்து காரியங்களையும் ஒழுங்கு செய்து, எல்லா உதவிகளையும் மனப்பூர்வமாய் செய்த போதகர் ராஜ் அவர்களுக்கும், அவரின் உதவியாளர்கள் அனைவருக்கும் IBT மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறது.

கர்த்தர் இவர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து உயர்த்துவாராக! இக்கூடுகையில் எடுக்கப்பட்ட அனைத்துத் தீர்மானங்களும் ஊழிய வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும்படி செயல்படுத்தப்பட ஜெபியுங்கள்.

சத்தியவார்த்தைப் பத்திரிகை வாசகர்களாகிய உங்கள் அனைவரையும், உங்கள் குடும்பத்தினரையும், தேவன் பாதுகாத்து, ஆசீர்வதித்து வழிநடத்த ஜெபிக்கிறோம்.

கர்த்தரின் பணியில்
உங்கள் சகோதரன்
**K. ஜெய்சிங்**

# எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.**

# பணித்தளச் செய்திகள்

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. ஸ்ரீனிவாஸ் சாக்கட</u>
<u>மொழி : பாகேலி</u>
<u>பணித்தளம் : காரா – ரேவா (மத்தியப்பிரதேசம்)</u>

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியை தடையின்றி செய்ய கிருபையளித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரத்தை ஏறெடுக்கிறேன்.

மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு புத்தகங்களின் அனைத்துப் புத்தகங்களின் சரிபார்ப்புப் பணியில் Word List, Biblical Terms சரிபார்க்கப்பட்டது. சரிபார்ப்புப் பணிக்காக கடந்த ஜூலை மாதம் ஒடிஷா மாநிலம் பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்திற்குச் சென்று 5-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை மற்ற ஏழு மொழிபெயர்ப்பாளர்களுடன் என் பணியும் சரிபார்ப்புச் செய்யப்பட்டது. கடந்த ஜூன் மாதம் 14-ஆம் தேதியன்று தமிழ்நாடு நெய்வேலியிலுள்ள ALC சபையில் நடைபெற்ற மிஷனெரிக் கூடுகையில் கலந்து கொண்டு என் பணிகளைக் குறித்து விளக்கிக் கூறினேன். இந்த சபை என்னைத் தாங்கி உதவி வருகிறது. இவ்வருட இறுதிக்குள் அனைத்துப் பணிகளையும் முடித்து Type Setting பணி ஆரம்பிக்க வேண்டுமென எனக்கு கூறப்பட்டுள்ளது. என் பணிகள் துரிதமாக முடிக்கப்படவும், 2028 மே மாதம் நடைபெறவுள்ள IBT லோகோஸ் முகாமில் புதிய ஏற்பாட்டுடன் சங்கீதம், நீதிமொழிகள் வெளியிடவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

<u>முன்னேற்றப் பணியாளர் : சகோ. கிதியோன்</u>
<u>பணித்தளம் : கோயம்புத்தூர் (தமிழ்நாடு)</u>

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

தேவனுடைய பெரிதான கிருபையினாலே கடந்த மாதம் முழுவதும் முன்னேற்றப் பணிகளைச் செய்ய தேவன் கிருபை செய்தார். முன்னேற்றப் பணிகளுக்காக ரத்தினபுரி, காந்திபுரம், கவுண்டம்பாளையம், உப்பிலிபாளையம், சிங்காநல்லூர், சுந்தராபுரம், கணபதி, சரவணம்பட்டி, N.K. பாளையம், போத்தனூர், ஆலந்துரை, செட்டிபாளையம், பேரூர், காருண்யா நகர் இன்னும் சில இடங்களுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து, காணிக்கைப் பெற்று, ஜெபித்து வந்தேன். IBT-இன் முன்னேற்றக் கூட்டங்கள் வரும் மாதங்களில் கிடைப்பதற்காக சபை ஆயர்களைச் சந்தித்து கேட்டிருக்கிறேன். இதில் CSI, TELC மற்றும் பெந்தேகொஸ்தே சபைகள் அடங்கும். கர்த்தர், ஆயர்கள் உள்ளத்தில் பேசி, சந்தர்ப்பங்கள் கிடைக்கவும், 2028-ஆம் ஆண்டு நடக்கவுள்ள IBT-இன் லோகோஸ் முகாமில் 4 வேதாகமங்களும், 7 புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்கள் வெளியிட தடைகள் ஏற்படாமல் இருக்கவும் ஜெபியுங்கள். இதற்காகும் தேவைகள் சந்திக்கப்படும்படியாக தாங்குநர்கள் கிடைக்கவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

---

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோதரி R. அனுராதா</u>
<u>மொழி : படுகா</u>
<u>பணித்தளம் : அரவங்காடு (நீலகிரி, தமிழ்நாடு)</u>

கடந்த மாதம் முழுவதும் பாதுகாத்த கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். வழக்கம்போல் படுகா வேதாகமத்தை வாசித்து, அதை படுகா மொழிபேசும் மக்களுக்கு வாட்ஸப் மூலமாக அனுப்பினேன். கடந்த மாதம் பழைய ஏற்பாடு புத்தகம் சகரியா 5-ஆம் அதிகாரம் தொடங்கி, புதிய ஏற்பாடு லூக்கா 8-ஆம் அதிகாரம் வரை வாசித்து அனுப்பப்பட்டது. வேதாகம சரிபார்ப்புப் பணியும் செய்யப்பட்டது. பழைய ஏற்பாடு புத்தகம் உபாகமம் அதிகாரம் 18 முதல் யோசுவா 13-ஆம் அதிகாரம் வரை சரிபார்ப்பு செய்யப்பட்டது.

மொழிபெயர்ப்பு தவிர, உபவாச ஜெபம் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும், சனிக்கிழமைகளில் குடும்ப ஜெபக்கூட்டமும், ஞாயிறு ஆராதனையும் நடத்தப்பட்டன.

முன்னேற்றப் பணிக்காக அரவங்காடு, குன்னூர், சாந்தூர் ஆகிய இடங்களுக்குச் சென்று, IBT தாங்குநர்களைச் சந்தித்து, காணிக்கையைப் பெற்று அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். மேலும் கீழ் ஹொசஹட்டி, மேல்ஹொசஹட்டி, அரவங்காடு ஆகிய இடங்களுக்குச் சென்று, விசுவாசிகளை சந்தித்து, ஞாயிறு ஆராதனைக்கு செல்லுமாறும் அவர்களுக்கு நற்செய்தியையும் அறிவித்து ஜெபித்து வந்தோம்.

என் மொழிபெயர்ப்புப் பணியில் மீண்டும் விரைவில் இரண்டாம் பதிப்பு வெளியிடுமுன், சரிபார்ப்பு விரைவில் முடிக்கப்படவும், சபை ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

--------------------

**மொழிபெயர்ப்பாளர் : சகோ. சோபத்ராம் டோப்போ**
**மொழி : குருக்**
**பணித்தளம் : லைலுங்கா (சட்டிஷ்கார்)**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணி பாராடெக்ஸ்ட்-இல் செய்யப்பட்டுள்ளது. கீ-இன் பணி சங்கீதம் 1 முதல் சங்கீதம் 55 வரை செய்யப்பட்டது. இப்பணி முடிக்கப்பட்டு சரிபார்ப்பும் முடிக்க வேண்டியுள்ளது. மிஷனெரிப் பணியில், குடும்ப ஜெபக்கூடுகை லைலுங்காவிலும், குடாமா ஆகிய பணித்தளங்களில் நடத்தப்பட்டது. இதில் 10-11 பேர்கள் பங்கு கொள்கிறார்கள். இந்த குடுக் மொழியிலும், புதிய ஏற்பாட்டுடன் சங்கீதம், நீதிமொழிகள் விரைவில் முடிக்கப்பட்டு அச்சிடப்பட வேண்டும். 7 மொழிகளில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், 2028 லோகோஸ் முகாமில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளதால் இந்த குடுக் மொழியும் அவற்றில் ஒன்று. ஆகவே என் மொழி பெயர்ப்புப் பணியை துரிதமாக முடிக்கப்பட ஜெபியுங்கள்.

## 800 மொழிகளில் முழு வேதாகமம்

வைக்ளிஃப் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் (Wycliffee Bible Translators), முழு வேதாகமம் தற்போது 800-ஆவது மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். இதன் மூலம் உலகம் முழுவதும் சுமார் 620 கோடி மக்கள் தங்கள் தாய்மொழியில் முழு வேதாகமத்தை வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

வேதாகம மொழிபெயர்ப்புப் பணியின் அண்மைக்கால முன்னேற்றம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். முதல் 400 மொழிகளில் முழு வேதாகமம் மொழிபெயர்க்கப்படுவதற்கு 1,900 ஆண்டுகளுக்கும் மேலாக எடுத்துக் கொண்ட நிலையில் அடுத்த 400 மொழிகளில் மொழிபெயர்ப்பை நிறைவேற்ற வெறும் 28 ஆண்டுகள் மட்டுமே எடுத்துள்ளது.

- Forerunner July 2026 மாத இதழிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

### இதற்காக ஜெபியுங்கள்!

**இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் 2028 லோகோஸ் முகாமில் வெளியிடப்படவுள்ள வேதாகம புத்தகங்கள்**

| மொழி | மொழிபெயர்ப்பாளர் | மாநிலம் |
|---|---|---|
| பரிசுத்த வேதாகமம் | | |
| 1. மிர்கான் | கேசப் மிர்கான் | ஒடிசா |
| 2. கலகாண்டியா | பித்தாம்பர் மஹனங் | ஒடிசா |
| 3. தெஷியா | கிறிஸ்துதான் | ஒடிசா |
| 4. போஜ்புரி | சுதிர்குமார் | உத்திரப்பிரதேசம் |
| புதிய ஏற்பாடு, சங்கீதம் & நீதிமொழிகள் | | |
| 1. டிங்கால் | அல்தாஃப் ஹுசைன் | ராஜஸ்தான் |
| 2. குடுக் | ஷோபத்ராம் | சத்தீஸ்கர் |
| 3. பாகேலி | ஸ்ரீனிவாஸ் சாக்கட் | மத்தியப்பிரதேசம் |
| 4. பண்டேலி | தேவேஷ் குமாரி | மத்தியப்பிரதேசம் |
| 5. சோரா | கடாமண்டல் | ஒடிசா |
| 6. குவி | சாமுவேல் சந்தா | ஒடிசா |
| 7. சித்தி | பிரகாஷ் சித்தி | கர்நாடகா |

### Google Meet Prayer

IBT ஊழியங்களுக்காக (Google Meet) கூகுள் மீட் மூலமாக ஜெபிக்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட மொபைல் எண்ணிற்கு தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

**திரு. ராஜகுமார் – 80502 64321**
பிரதி சனிக்கிழமை : காலை 5.00 – 6.00 மணி

**திரு. சகாயசுவீடன் – 74899 66860**
பிரதி ஞாயிற்றுக்கிழமை : இரவு 9.00 – 10.00 மணி

**திரு. பால்ஜெயசுதன் – 097904 84572**
பிரதி புதன்கிழமை : இரவு 9.00 – 10.00 மணி

## இந்திய வேதாமக மொழிபெயர்ப்பாளர்கள்
## ஈரோடு கிளை நடத்தும்
# 20-வது குடும்ப ஆசீர்வாத கூடுகை-2026

| | | |
|---|---|---|
| இடம் | : | **C.S.I. பிரப் திருச்சபை அரங்கு, பிரப் ரோடு, ஈரோடு.** |
| நாள் | : | **02-10-2026, வெள்ளிக்கிழமை** |
| நேரம் | : | காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை |
| தலைமை | : | **அருள் திரு. P. எடின்புரோ,** ஆயர்/தலைவர், TELC ஆலயம், ஈரோடு. |
| செய்தியாளர் | : | **திரு. அமிர்தராஜ் (ஈரோடு)** |
| துதி ஆராதனை | : | **IBT குழுவினர், ஈரோடு.** |

**இனிய பாடல்கள், பணித்தள பகிர்வு, சவாலான மிஷனெரி செய்திகள், மிஷனெரி சாட்சி!**

**அனுமதி இலவசம். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். மதிய உணவு உண்டு.**

*தொடர்புக்கு :*

| | | | | |
|---|---|---|---|---|
| சகோ. D. ரவி | சகோ. S. ராஜன் | சகோ. M.P. செல்வராஜ் | சகோ. D. துரைராஜ் | சகோ. ராஜன் K. தங்கதுரை |
| ஒருங்கிணைப்பாளர் | முன்னேற்ற ஊழியர் | 94428 37352 | 94422 84286 | 94427 76480 |
| 98427 09994 | 93644 19127 | | | |

# உலகச் செய்திகள்

1. ஜப்பான் ஓபன் பாட்மின்டன் சூப்பர் 750 போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் முதன் முறையாக சாம்பியன் பட்டம் பெற்ற இந்தியர் என்ற சாதனையை பி.வி. சிந்து நிகழ்த்தினார். இறுதி ஆட்டத்தில் நடப்பு உலக சாம்பியன் அகென்யெமகுச்சியை 21-17, 21-17 என்ற கேம் கணக்கில் வீழ்த்தினார்.
2. தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் முழுவதையும் மனனம் செய்து, 22 மணி நேரத்தில் எழுதி முடித்து, அரசுப் பள்ளி மாணவி உமா மகேஷ்வரி உலக சாதனை படைத்தார்.
3. இந்திய விண்வெளி வரலாற்றில் முதன்முறையாக 18.7.2026 அன்று ஸ்ரீஹரி கோட்டாவிலிருந்து தனியார் நிறுவனத்தின் உள்நாட்டு தயாரிப்பான விக்ரம்-1 ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்ட 16-ஆவது நிமிஷத்தில் வெற்றிகரமாக புவியின் தாழ் வட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.
4. ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள “பிச்பிளாக்” பிரமாண்ட சர்வதேச போர் விமானப் பயிற்சியில் இந்திய விமானப் படையின் ரஃபேல் போர் விமானங்கள் பங்கேற்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
5. பிரிட்டனின் புதிய பிரதமராக ஆளும் தொழிலாளர் கட்சியின் தலைவர் ஆண்டி பர்னஹம் (56) திங்கட்கிழமை (20.7.2026) முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து, தலைநகர் லண்டனில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ 10. டவுனிங் ஸ்டீரிட் இல்லத்தில் ஆண்டி பர்ன்ஹாம் முதல்முறையாக உரையாற்றினார்.
6. FIFA உலகக் கோப்பை கால்பந்து 2026 சாம்பியனாக ஸ்பெயின் மகுடம் சூடியது. நட்சத்திர வீரர் ஃபெர்ரன் டோரஸ் 106-ஆவது நிமிஷத்தில் அடித்த லேட் கோலால் நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா தோல்வியைத் தழுவியது.

# முக்கிய அறிவிப்பு

- ★ சத்திய வார்த்தை பத்திரிகையை மின்னஞ்சல் மூலமாக பெற விரும்புவோர் **wordpublisherstrust@gmail.com** என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.
- ★ சத்திய வார்த்தை வாசகர்கள் “WhatsApp” மூலம் சத்திய வார்த்தை பத்திரிகையை (தமிழ், ஆங்கிலம்) பெற விரும்புகிறவர்கள் IBT WhatsApp No. **90470 57414** என்ற எண்ணிற்கு தெரிவிக்கவும்.
- ★ IBT Website-லும் சத்திய வார்த்தை தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகையை **(www.ibtword.com)** பதிவிறக்கம் செய்து, வாசித்துப் பயன்பெற்றுக் கொள்ளலாம்.

## தேவை

சென்னையிலே பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 100/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

## IBT பிரதிநிதிகள்

IBT ஊழியத்தில் தன்னார்வ ஊழியர்களாய் (Representatives) இணைய விருப்பமுள்ள, ஊழிய பாரமுள்ளவர்கள் நீங்கள் இருக்கும் பகுதியில் IBT ஊழியத்தை அறிமுகப்படுத்தலாம்; சிறுகுழுவாக ஜெபிக்கலாம். விபரங்களை அறிய விரும்புவோர் IBT அலுவலகத்தின் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம். **அலைபேசி எண். 90470 57414**

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. 2028–ஆம் வருட லோகோஸ் முகாமில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ள 4 வேதாகமங்கள், 7 புதிய ஏற்பாடு சங்கீதம், நீதிமொழிகள் ஆகிய புத்தகங்களுக்கு அச்சிடுவதற்கு தாங்குநர்கள் முன் வந்துள்ளதற்காக கர்த்தரைத் துதியுங்கள். அச்சிடுவதற்கு முன் Type Setting இருமுறை செய்யப்பட்டு, சரிபார்ப்பு முடிந்த பிறகுதான் புத்தகமாக அச்சிடும்பணி ஆரம்பிக்கப்படும். ஆகவே Type Setting செய்வதற்கான பணத்தேவை சந்திக்கப்படவும், தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

2. கடந்த ஜுலை மாதம் 18, 19 தேதிகளில் செங்கல்பட்டு மாவட்டம், ஊரப்பாக்கத்திலுள்ள “ஜுபிலி மெமோரியல் பைபில் காலேஜ்” வளாகத்தில் IBT திட்டக்கூடுகை திட்டமிட்டபடி நடந்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். இக்கூடுகையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தடையின்றி செயல்படுத்த ஜெபியுங்கள்.

3. புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் செய்துவரும் மொழிபெயர்ப்பாளர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் 16–ஆம் தேதி முதல் கோவை IBT மையத்தில் வந்து, தங்கள் பணிகளைச் செய்து வருவதற்காகவும், கர்த்தர் பல மாநிலங்களிலிருந்து வந்த அவர்களுக்கு பாதுகாப்பான பயணத்தை வாய்க்கச் செய்ததற்காகவும் கர்த்தரைத் துதிப்போம். இவர்களும் செப்டம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்து நவம்பர் மாதம் இறுதி வரை தங்கள் பணிகளைச் செய்ய வரும் 4 வேதாகம (Full Bible) மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பண்டேலி மொழிபெயர்ப்பாளர் (புதிய ஏற்பாடு, சங்கீதம் & நீதிமொழிகள்) இவர்களும் தங்கள் பணிகளை முழுவதும் முடிக்கவும், இதன்பின் தங்கள் பணித்தளங்களுக்குச் சென்று, குழு சரிபார்ப்புப் பணியை ஆரம்பிக்கவும் ஜெபிப்போம்.

4. கோவை, TVS நகரிலுள்ள C.S.I. கிறிஸ்து நாதர் ஆலயத்தில் IBT-இல் பணிபுரியும் மிஷனெரி ஒருவரைத் தங்குவதற்கு முன் வந்ததால் கர்த்தரைத் துதிப்போம். இச்சபையின் ஆயர், செயலர், பொருளர் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 3527370
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**

## சத்திய வார்த்தை

‘சத்திய வார்த்தை’ பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of
**Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by
**Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBINO282057

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd September 2026
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**